# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, KUMBAKONAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C No. 380 /2023 |
| Deposition of witness | : | PW-1 |
| Name | : | பேபிலலிதா |
| Father's /Husband Name | : | சிவசங்கர் |
| Village | : | கும்பகோணம் |
| Taluk | : | கும்பகோணம் |
| Age | : | 44 |
| Occupation | : | யோகா ஆராச்சி மையம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 20th day May 2024.
Accused present.

**முதல் விசாரணை:-**

நலம் இயற்கை நலவாழ்வு மற்றும் யோகா ஆராய்ச்சி மையம் நானும் எனது கணவரும் நடத்தி வருகிறோம். கடந்த 24.08.2022 ஆம் தேதி மாலை 06.00 மணியளவில் கும்பகோணம் குவாலிட்டி இன் விகா ஓட்டலில் பரதநாட்டிய நிகழச்சிக்கு எனது இரண்டு குழந்தைகள் மற்றும் எனது கணவருடன் சென்றேன். காடுவெட்டி தெருவில் உள்ள எனது ஸ்ரீ சாய் இல்லத்தை பூட்டிவிட்டு சென்றேன். நிகழச்சி முடிந்து 08.45 மணியளவில் என் வீட்டிற்கு வந்து பார்த்தபோது வீடு மற்றும் பீரோ திறந்துகிடந்தது. உள்ளே சென்று பார்த்தபோது பீரோவில் இருந்த ஆரம் - 2, நெக்லஸ் - 2, வளையல் - 2, மோதிரம் - 8, கைசெயின் - 3, கழுத்து செயின் - 1, தாலிகொடியுடன் கூடிய குண்டுகள், தோடு - 6 செட், மூக்குத்தி-3 மொத்தம் 48 பவுன் நகைகள் காணவில்லை. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் நான் எழுதி கொடுத்தேன் (**அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). தற்போது என்னிடம் காட்டப்படும் இரண்டு புகைப்படத்தில் உள்ள நகைகள் என்னுடையது. **அந்த இரண்டு புகைப்படங்கள் அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 02.09.2022 அன்று காவல் நிலையத்திலிருந்து நகை கிடைத்துவிட்டதாக தகவல் கேள்விபட்டு காவல் நிலையம் சென்று 19 பவுன் நகைகளை அடையாளம் காண்பித்தேன். அப்போது காவல் நிலையத்தில் எங்கள் வீட்டில் வேலை செய்த ஆஜர் எதிரி இருந்தார். எங்கள் எதிர் வீட்டில் உள்ள cctv camera ல் நகை திருடி சென்றதாக பதிவு செய்யப்பட்டிருந்தது. பின்னர் நீதிமன்றத்தில் உரிய மனு மூலம் எனது நகைகளை இடைகால பொறுப்பில் பெற்றுசென்றேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**:-

02.09.2022 அன்று நகையை அடையாளம் காட்டசொல்லி ஆய்வாளர் தகவல் தெரிவித்தார். காவல் நிலையம் சென்றபோது ஆய்வாளர் மற்றும் மற்ற காவலர்கள் இருந்தார்கள். மேசையில் தங்க நகை மற்றும் கவரிங் நகைகள் வைக்கப்பட்டிருந்தது. மேசையில் இருந்த நான் வாங்கிசென்ற 19 பவுன் நகைகளை தவிர வேறு நகைகள் இருந்ததா என்றால் கவரிங் நகைகள் இருந்தது.

2. புகாரை நான்தான் எழுதினேன். புகாரில் 48 பவுன் நகை காணாமல்போனதாக சொல்லியுள்ளேன். அதில் வெள்ளிபொருட்கள், கவரிங் நகைகள் காணாமல்போனதாக சொல்லவில்லை. cctv camera வை நான் தனியாக பார்த்துவிட்டு போலிசாரிடம் கூறினேன். அன்றைய தினமே அதனை 31.09.2022 அன்று போலிசாருக்கு அனுப்பிவைத்தேன். எனது செல்போனிலிருந்து ஆய்வாளர் செல்போனுக்னு அனுப்பினேன். அந்த பதிவில் எதிரி எந்த நேரத்தில் நகைகள் எடுத்ததாக உள்ளது என்றால் மாலை சுமார் 06.45 - 07.15 மணிக்குள் இருக்கும்.

3. புகாரில் எதிரியை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான், அப்போது எதிரிதான் நகையை எடுத்தார் என தெரியாது. போலிஸ் விசாரணையில் எதிரி எங்கள் வீட்டில் வேலை செய்ததாக குறிப்பிட்டு சொல்லியுள்ளேன். நான் சொல்வதுபோல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றாலும், வேறொரு நபரிடமிருந்து நகையை கைப்பற்றி எதிரிக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

4. அ.சா.பொ.1 காவல் நிலையத்தில் மேசையில் வைத்து எடுக்கப்பட்டது. எந்த தேதியில் யார் போட்டோ எடுத்தார் என்று தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் இரண்டு புகைப்படங்களில் உள்ள கவரிங் நகைகள் எனது குழந்தைகளின் பரதநாட்டிய நகைகள் ஆகும். **அந்த இரண்டு புகைப்படமும் எ.சா.ஆ-1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** கவரிங் நகை பற்றி புகாரில் சொல்லவில்லை, போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன். கவரிங் நகையும் சேர்த்து 48 பவுன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல, 48 பவுன் தங்க நகைகள் ஆகும்.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

Sd./- M. Elavarasi,
Judicial Magistrate No.I,
Kumbakonam.